தனிச்சுற்றுக்கு மட்டும்... விற்பனைக்கல்ல...

2026 February 16-28

அழகிய அரம்பம்

இனி


ஈ இதழ்

இன்று என்றும் நன்று



காதல் தவிர வேறில்லை...

அழகிய
பரிசுகள்
உள்ளே...



இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in



அனைவருக்கும் வணக்கம்.

சென்ற இதழில் தொழில்நுட்ப வித்யாசத்தை பலரும் பாராட்டினார்கள். தொட்டவுடன் வாட்சப், யு ட்யுப் போவதை பலரும் அனுபவித்து மகிழ்ந்தனர். அனைவருக்கும் நன்றி.

மலர்மதி அவர்களின் சிறப்பிதழ் அருமை என்றும், பயணக்கட்டுரை உடனே துபாய் செல்லத்தோன்றியதாக பலரும் தெரிவித்தனர். சிறப்பாசிரியர் மலர்மதி அவர்களுக்கு நன்றி...

இந்த இதழ் காதல் கவிதை சிறப்பிதழ் என்பதால் வழக்கமான படைப்புகள் அடுத்த இதழில்

நன்றி

வெ.கோபிநாத், ஆசிரியர்

மார்ச் 2026

இன்று ஈ இதழ்

சிறப்பாசிரியர்

குடந்தை பரிபூரணன்



பக்தன்

உன்
அளவற்ற
அன்பைத் தவிர
வேறெது
என்னைக்
காதல்
பக்தனாக்கியிருக்க
முடியும்!

ம(த)ந்திரம்

எனக்கு மட்டும்
மந்திர தந்திரங்கள்
தெரிந்திருந்தால்
இது வரை
நீ வழங்கிய
முத்தங்களால்
ஒரு முத்த மாளிகையே
கட்டியிருப்பேன்!

பீனிக்ஸ்

எத்தனை
தோல்வி வந்தாலும்
அதிலிருந்து
மீண்டெழும் சக்தியை
எனக்கு வழங்குவது
நீ மட்டும் தான்
அன்பே!

முத்தம்

ஒரு முத்தம் கூட
வழங்காமல்
என்னைத்
திசை திருப்பி
நேரத்தைக் கடத்தும்
காதலழகி
நீ ஒருத்தியாகத்தான்
இருக்க முடியும்!

பொய்

இன்று மட்டு(மே)ம்
காதலர் தினம் என்று
பொய் சொல்கிறார்கள்
பார் அன்பே!
என்றுமே
நமக்குக் காதலர் தினம்
தானே!




முத்து ஆனந்த்
வேலூர் 7010482479

7094053241
indhrumail@gmail.com
www.indhru.in

காதலை கேட்டால்
தரமாட்டாய்
என தெரியும்
கொஞ்சம்
புன்னகையோடு
ஒரு கோப்பை
தேநீராவது தா!!

லி.நௌஷாத் கான்
971561093550



காதல் கவிதையை தவிர
வேறேதும்
தெரியாதா என்றான்.
அந்த மூடனுக்கு
எப்படி சொல்வேன்?
இப்பிரபஞ்சம் சுழல்வதே
காதலால் தானென்று!!

–லி.நௌஷாத் கான்–

தினம்,தினம்
காதலை சுவாசித்து
உன்னிடம்
அடிக்கடி
உள்ளுணர்வால்
உணர்த்துபவனுக்கு
எதற்கு?
PROPOSE DAY!!

அவள் கானலாய்
போன பின்பும்
அவள் மீது கொண்ட காதல்
மட்டும்
இன்னும்
மாறவே இல்லை!

கற்பனைகளும்
தேவையில்லை
காகிதங்களும்
தேவையில்லை
எழுதுகோலும்
தேவையில்லை
மனப்புத்தகத்தில்
எழுதுவேன்
அழகான காதல்
கவிதைகளை
உன் மை கொண்டு!!

உன்னை கண்ட
பிறகு
சுட்டது காதல்!

நீ
நான்
நிலா-மற்றும்
மழைக்கொஞ்சும்
தமிழோடு
மயக்கமேற்றும்
அந்த இளையராஜா
பாடல்
கொஞ்சமாய்
அமைந்தால் கூட
வாழும் வாழ்க்கை
சொர்க்கம் தான்!!

பனி படறும்
புல்வெளிக்கு செல்லாதே
நீ சென்று வந்தால்–அது
வண்ணத்துபூச்சிகள்
காதல் கொள்ளும்
பூந்தோட்டமாக
மாறிவிடும்!!

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in

விளம்பர விபரம்

அன்பார்ந்த வாடிக்கையாளரே...
இன்று ஈ இதழ் கடந்த ஓராண்டாக எந்த விளம்பரமும் இல்லாமல் பல்வேறு வாட்சப் குழுக்கள் வழியாக தமிழகம் முழுவதும் மற்றும் கடல் கடந்தும் 10,000 த்திற்கும் மேற்பட்டவர்களுக்கு செல்கிறது.

இன்று ஈ இதழில் விளம்பரம் செய்தால் www.indhru.in என்ற இணையத்திலும் இலவசமாக விளம்பரம் பதிவேற்றம் செய்யப்படும். உங்களுக்கு இது கூடுதல் நன்மையைத் தரும்...

இந்த குறைந்தகால சலுகையை பெற்று பயனடையுமாறு அன்புடன் அழைக்கிறோம்... இதழ் வேண்டுமா? கீழே உள்ள படத்தைத் தொடவும். இன்று ஈ இதழ் படிக்கலாம்.

ஒரு பக்க விளம்பரம் ரூ.~~10,000~~
சலுகை விலையில் **ரூ.5,000** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.208/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.
இத்துடன் ஒரு ஆண்டு முழுவதும் www.indhru.in இணையத்திலும் விளம்பரம் இலவசமாக வெளியாகும்.

அரை பக்க விளம்பரம் ரூ.~~5,000~~
சலுகை விலையில் **ரூ.2,500** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.104/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.
இத்துடன் ஒரு ஆண்டு முழுவதும் www.indhru.in இணையத்திலும் விளம்பரம் இலவசமாக வெளியாகும்.

கால் பக்க விளம்பரம் ரூ.~~2,500~~
சலுகை விலையில் **ரூ.1,250** மட்டுமே/-
(ஒரு இதழுக்கு விளம்பர செலவு ரூ.52/- மட்டுமே)
ஒரு ஆண்டுக்கு 24 இதழ்களில் விளம்பரம் வெளியாகும்.

மேலும் விபரங்களுக்கு 7094053241 என்ற எண்ணுக்கு வாட்சப்பில் தொடர்புகொள்ளவும். அல்லது அருகிலுள்ள படத்தைத் தொடவும்

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in

பரிசுப் பொருட்கள்



வருடம் முழுவதும் உங்கள் விளம்பரம்
கண்ணில் பட்டுக்கொண்டே இருக்கும்.
காலண்டர் தருவதை விட இது சிறந்தது...



வாடிக்கையாளர்களுக்கு
பரிசளிக்க
ஏற்றது...









மொய் கவர்கள்
ஒட்டும்
வசதியுடன் உள்ளது

உங்கள்
பெயரில்
செய்யலாம்.

கண்ணில்
பட்டுக்கொண்டே
இருக்கும்
விளம்பரம்...

குறைந்தபட்சம்
பத்து
எண்ணிக்கையில்
செய்யலாம்

இன்று
வெப்சைட்க்கு
க்ளிக் செய்யவும்

கீ செயின் ஹேங்கர் வீடியோ பார்க்க
கீழே உள்ள படத்தை தொடவும்...

இன்று
வாட்சப்-க்கு
க்ளிக் செய்யவும்

இன்று-வின் பரிசு
₹50

காதல் கவிதை –இன்று ஈ பதிப்பு

"கவிதையெழுத
ஆழ்ந்த யோசனையின் பொழுதில்
கவனச் சிதறல் ஆக்கிய
நீயே எனது
கவிதை ஆகிறாய்
அன்பே!



கே. அசோகன்
சென்னை
Mob : 9047896065

பிப்ரவரி – 14

காதலர் தினத்தில் பூங்காக்கள்
எதிர்நோக்கி காத்திருக்கின்றன
கரை படாத காதலர்களை !
ஆனால்....
புதர் மறைவில் அரங்கேறும்
தணிக்கை செய்யப்படாத ஊடல்
காட்சிகளால்
களங்கப்பட்டு தான் போகிறது
காதலர்தினம் !



இன்று-வின் பரிசு
₹50

எம்.பி.தினேஷ்.
கோவை – 25

7094053241
indhrumail@gmail.com
www.indhru.in



கிராமத்து காதல் கவிதை

மையல் கொண்டேன் – உன்
மை விழிகளிலே!
மான் விழியாலே – எனை மயக்கிட்டாயே – புள்ள
ரெட்டை ஜடை அழகோ
றெக்க முளைக்க வைக்குதடி
கை வளையல் அழகோ
கிறுக்கு புடிக்க வைக்குதடி!


ஆத்தோரம் குடத்தோடு
அக் கரையில் நிக்கும் உன்னை
ஓரக் கண்ணால நா பார்க்க
உதட்டோரம் நீ சிரிக்க! தினமும் காலையில உனை ரசிக்க
திருட்டுத் தனமாய் நா வாரேன்
தினமும் உனை பார்த்ததும்
திருவிழா கோலம் யெ மனசுல!

சம்மதனு சொல்லு புள்ள
ஜாதி ஜனத்தை கூட்டிக்கிட்டு
பாக்கு வெத்தல எடுத்துக்கிட்டு
பரிசம் போட நா வாரேன்!
சமயம் பார்த்து உன் ஆத்தா கிட்ட சொல்லி
சம்மதம் வாங்கி வாயேன்
சாயங்காலம் வரை நா காத்துகிடக்கிறேன் புள்ள!

ஏய் புள்ள கேட்டுச்சா
என் பேச்சை நீ கேட்பாய்யா!
சட்டுபுட்டுன்னு நீ சொல்லு
சரின்னு சம்மதம் சொல்லு
காலம் நேரத்தோட
கல்லாணம் பண்ணிகிட்டு
புள்ள குட்டி பெத்துக்கிட்டு
பொறுப்பாய் வாழ்வோம் புள்ள!


மனசு துடிக்குது
பாவி உன்னை தினமும் நினைச்சி
ராவுல படுத்தா தினமும்
ராசாத்தி நீ தான் என் கனாவுல!

கண்டாங்கி சேலை கட்டிகிட்டு
கெளித்தி மீனை எடுத்துக்கிட்டு
வரப்பு ஓரம் நீ வார
வஞ்சி ஓ கொள்ளழகு என்னை
தூங்க விடமாட்டுங்குதே!
உன் நெனப்பு என்னை
கிறுக்கு பிடிக்க வைக்குதடி
கிறுக்கு பிடிக்க வைக்குதடி!



பா கலைமகள்
விழுப்புரம்

7094053241
indhrumail@gmail.com
www.indhru.in



முத்தம்

நான்கு 'இதழ்களில்'
ஒரு காதல் பூ
என
முத்தம் பற்றி
கவிதை எழுதிக்
கொடுத்திட்டேன் அவளிடம்...
'இச்'சென முத்தம்
தந்திடுவாள் என
காட்டினேன் கன்னத்தை...
அவளோ
'பச்'சென ஓர் அறை தந்து
பழுக்க வைத்திட்டாள் கன்னத்தை...
பழுத்திடும் என்றாவது காதல்
எனக் காத்திருந்தேன்
பல நாட்கள்...
அத்திருநாளும் வந்தது...
பிப்ரவரி 14...
நான் காகிதத்தில்
எழுதித்தந்த கவிதையை
அவள் எழுதினாள்
தன் இதழ்களால்
என் இதழ்களில்...
காதல் வாழ்க!!

– ரிஷிவந்தியா, தஞ்சாவூர்.

இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in

காதல் கவிதை

உன் பார்வை விழுந்த நாளே
என் உலகம் மெதுவாக மாறியது
சிரிப்பின் ஓரத்தில்
ஒளிந்துஇருக்கும்
ஒரு மௌன மொழி நீ
சாதாரண நாட்களுக்கும்
அர்த்தம் கொடுக்கும் அதிசயம்
கைகளில் பிடித்த கனவாய்
நெஞ்சில் தங்கிய நிம்மதி
சொல்லாத வார்த்தைகளுக்கும்
பொருள் தரும் என் காதல் நீ

கல்லிடை சிவா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135







ரெட்டை ஜடை வயசு...

அகவை அறுபது
ஆனாலும்...

அந்த
இளமைக்கால
இரட்டை ஜடை காதலி

அலைகள்
ஓய்வதில்லை ராதா
போல்...
அடிக்கடி நினைவில்
வந்து போகிறாள்...

அலைகள்
ஓய்வதில்லை...
அது போல்...

காதலும்
ஓய்வதில்லை...

நினைவில்
நிலைத்து வாழும்...

G.Sundaramurthi
Musiri



புன்னகை
..
முகத்தில்
புன்னகை மலர
காதல் செய்வீர்
வாழ்க்கைக்காக.

திருச்சிற்றம்பலம் சுரேஷ்




இருவர்

காதலின் புது அகராதிப் புத்தகத்தில்-
நமது பெயரையும் சேர்ப்போமா!
வள்ளுவனின் முப்பால் குடித்தே-
பசியது மறப்போமா!
அலைபேசியும் கைவிரலும் போல-
இன்றும் என்றென்றும் இணைந்தே
நாம் இருவரும் இருப்போமா!

கோவைக்கவி புவனா



7094053241
indhrumail@gmail.com
www.indhru.in



366 நாட்கள் கொண்ட
லீப் வருடத்தைக் கூட
தினமும் காதலர் தினமாக்கும்
ஒரே திறமை கொண்ட
காதலி
உலகத்திலேயே
நீ
ஒருத்தியாகத்தான்
இருக்க முடியும் அன்பே!

முத்து ஆனந்த், வேலூர்



காதலர் தினம் !

வண்ணத்துப் பூச்சி
படபடத்து
பச்சிலை மேல்
வீற்றிருக்க
செல்லமாய் வருடும்
சிறகின் ஓசையில்
பச்சிலையும்
மெய் சிலிர்த்து நாணத்தில்
உடல் வளைக்க
வண்ணத்துப் பூச்சியும்
ஸ்பரிசத்தில்
முகம் சிவக்க
கள்ளமில்லா காதல்
களியாட்டம் அங்கே
ஆனந்தமான அரங்கேற்றம் !

பி. ஆர்.கிரிஜா



7094053241
indhrumail@gmail.com
www.indhru.in



வாய்ப்பு

பொருத்தமான வரன்கள் வேண்டுமெனில்
வாருங்கள் என்கிறார்கள்!
லட்சக்கணக்கான வரன்களினின்று
பிடித்தமானவரை
தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள் என்கிறார்கள்!
நம்பிக்கையான சேவை
சரிபார்க்கப்பட்ட சுயவிவரங்கள்
எளிமையான தேடல் யாவும்
சில நிமிடங்களில்
நிறையும் என்கிறார்கள்...!!
வாழ்க்கையிலும், விளம்பரங்களிலும்
புதுப்பிக்கப்பட்ட அன்புடன்
அடுத்த கட்டத்திற்கு
நிச்சயித்து நகரும்
தம்பதிகளாய் கைகோர்க்கும் வாய்ப்பு,
ஒருபோதும் கிடைப்பதே இல்லை
காதலர்களுக்கு!



ஸ்ரீநிவாஸ் பிரபு 93400 51321

7094053241
indhrumail@gmail.com
www.indhru.in



காதல்
வந்துவிட்டது.

அவளில்லாத
பொழுதுகள்
நீள்கின்றன...

நினைத்தாலே
மனம்
இனிக்கிறது...

கண்டபடி
கவிதைகள்
ஊற்றெடுக்கின்றன...

பெருந்தன்மை
பெருமளவில்
தோன்றுகிறது...

யாருமே
அழகாக
தெரியவில்லை...

காதல்
வந்துவிட்டது...

நம்.திரு.ரஅம்ஏச்

7094053241
indhrumail@gmail.com
www.indhru.in

(மழைத்துளிகள்)

வானத்திலிருந்து_
விழுகின்ற மழைத்துளிகள்
உன் பெயரை
சொல்லுமேயானால்
அத்தனையும்
சேர்த்து வைப்பேன்
என் இதயத்தில்
பத்திரமாக!






(எப்படி?)

நெஞ்சுக்குள்
ஒளிந்திருக்கும்
காதலை விட
கண்ணுக்குள்
ஒளித்திருக்கும்
காதலுக்கு
சக்தி அதிகம்
அப்படி இருக்கும் பொழுது
காதலுக்கு
கண்ணில்லை என்றால்
எப்படி?

பாரதி முத்து




இன்று எ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
18



கறை கண்டவன்

காதல் கலையில்
கரை கண்டவன் என்று
என்னைக் கூற முடியாது.
ஆயினும்
பலமுறை கறை கண்டவன் நான்...
உன் முத்தத்தால்!



சு.அருண் பிரகாஸ்
இராமச்சந்திராபுரம் 8526037792

மினி கதை –




பச்சைக்கொடி

மலர்மதி
அலைபேசி: 8667417874

மகளின் காதலுக்கு உடனே பச்சைக்கொடி காட்டினார் பச்சையப்பன், நிறைவேறாத காதலால் தான் பட்ட மனவேதனை தன் மகள் படக்கூடாது என்ற நல்லெண்ணத்தில்!

7094053241
indhrumail@gmail.com
www.indhru.in



ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்



பிப்ரவரி-14

" காதலித்துப்பார்...!"

காதலித்துப்பார்...
உலகத்தின் எட்டாவது
அதிசயம் உனக்குள்
தோன்றும்....!

கற்பனைச் சிறகில்
வானமும் உன்னிடம்
வசப்படும்...!

சொர்க்கம் உன்னிடம்
தர்க்கம் செய்து
வியர்க்க வைக்கும்...!

வைகறைப் பொழுது
உன்னை மெய்த்தீண்டி
பைந்தமிழ் பாட வைக்கும்...!

மலைக்கோட்டை
அத்தனையும்..உன்
மனக்கோட்டையில்
மலர்க்கோட்டையாய்
மணம் வீசும்....!

சாதியும் மதமும்
சம்பந்தியாகி
உனக்கு சா(வு) மரம் வீசும்....!

தேக சூட்டில்
புது ராகம்
மோகனம் பாடும்..!

வாழ்வின் புதுப்புது
அர்த்தங்கள்
புரியாமல்
புலம்பித்தவிக்கும்..!

இரவுத் தூக்கம்
புது உறவுக்கு
பாலம் போடும்..விரல்கள்
கோலம் போடும்..!

ஆற்றல் அத்தனையும்
உன்னிடம் அத்துமீறும்..
முத்தான கையெழுத்து
முடங்கி போகும்..மூச்சும்
கொஞ்சம் கொஞ்சமாய்
அடங்கி போகும்...!

காசா? பணமா?
காதலித்துப்பார்
இன்னொரு மனசை
நீ எடை போடுவாய்...
புது நடை போடுவாய்...!

காதலில் வெற்றி அடைந்து
வாழ்வதைவிட...
தோல்வியடைந்து
சுகமான நினைவுகளை
சுமந்து பார்...

காலமெல்லாம்
காதல் உன்னோடு
வாழ்ந்துகொண்டிருக்கும்...!!!

கவிஞர்.இல.இரவி
செ.புதூர்.612203
அ.பேசி:9952113194



7094053241
indhrumail@gmail.com
www.indhru.in



ஒரு காதல் அரும்புகிறது

ஊசிமுனைத் துளையில்
ஒட்டகம் நுழையுமா
எனது மனத்தில்
காதல் மலருமா...

ஒன்றும் நடக்காதுவென
எறிந்த பந்தாக
அவளிடமிருந்து மீண்டு
திரும்பியது எனது
காதல் முன்னெடுப்பு...

எறும்பு ஊறிட
கல் தேயுமென்றால்
எனது முன்னெடுப்புக்கள்
வெல்லாமல் போகுமா...

அவள் மனத்தில்
என்மீதான காதலினை
அறிந்தவன் நான்...

நெரிசல்மிகு
சாலையொன்றில்
அய்யோ செத்தேனென்று
நானிரைந்த தருணம்
அவள் ஒருத்திமட்டுமே
பரிதவித்துப் பார்த்தாள்.

கா. ஹபீப் முகமது.

இன்று ஈ இதழ்
7094053241
indhrumail@gmail.com
www.indhru.in
22



உனது விரல் நகங்களுக்கு
வண்ணம் குழைத்து
பூசுகின்றாயா?
எண்ணம் குழைத்து
பூசுகின்றாயா?

நகக்கண்களும்
பேசுகின்றனவே...

- ஆதி. சௌந்தரராஜன்

காதலுக்கு ஏதடி எல்லை

என் காதல் வானுக்கு
இரட்டை சூரியன் அது
உன் விழிகள்....
நான் கற்கும்
உயர் இலக்கியம் அது
உன் வாய் மொழிகள்...
என் உயிர் நனைக்கும்
கார்மேகம் அது உன்
கூந்தல் அலைகள்....
நான் ரசிக்கும்
காதல் கவிதைகள்
இனியவளே அது
உன் கால்தடங்கள்....
என்னைத் தாலாட்டும்
தாய்மடி அது உன்
நினைவுகள்....
இனி நீ வேறு
நான் வேறு இல்லை
நம் காதலுக்கு ஏதடி
எல்லை ...



ஏ. மூர்த்தி
புல்லரம்பாக்கம்

சிறகடித்துப் பறக்கும்
பட்டாம் பூச்சிகளுக்கிடையே,
என் உயிர் குடித்துப் போன
உனக்காகக் காத்திருக்கிறேன்.
கடந்து செல்ல முடியாத
இந்தக் கணங்களில்
நான் கட்டுண்டு கிடக்கிறேன்.
ஏழு பிறவியிலும்
எய்த முடியாதப்
பரவசத்தில் தளும்பிக்கிடக்கிறது
இதயம்.
எந்த மேளகர்த்தாவுக்கும்
வசப்படாத ஓர் இனிய
இராகத்தை மீட்கத் துடிக்கும்
என் இதய வீணை கண்களின்
வாசலில் வந்து காத்துகிடக்கிறது.
பூங்காவிற்குள் நீ நுழைந்ததும் என்
கற்பனைகள் எல்லாம் கலைந்து
நந்தவன பூக்கள் எல்லாம்
ஓடிவந்து என் இதயத்தில்
இடம்பிடித்துக் கொண்டன.



குடந்தை
பரிபூரணன்

கதைகளில் கவிதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே...
யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241

